ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30,சனாதிபதிமாவத்தை,கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2020.06.01 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 மாச்சு

### முக்கிய பண்புகள்

*கொவிட்-19 தொற்று மற்றும் 2020 மாச்சு பின்னரைப்பகுதியில் இலங்கை பகுதியளவில் முடக்கப்பட்டிருந்தமை என்பன 2020 மாச்சில் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தினைப் பாதித்தன. உள்நாட்டு உற்பத்திச் செய்முறைகளின் இடையூறுகளுடன் சேர்ந்து நிரம்பல் மற்றும் கேள்விச் சங்கிலிகளில் காணப்பட்ட தடங்கல்கள் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலும் அதேபோன்று வணிகப்பொருட்களின் இறக்குமதிகளிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைத் தோற்றுவித்தன. எனினும், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரிதாக இருந்தமையின் காரணமாக, 2019இன் இதே காலப்பகுதியினை விட வர்த்தகப் பற்றாக்குறை குறுக்கமடைந்தது. உலகளாவிய ரீதியில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையம் மூடப்பட்டமை என்பனவற்றின் காரணமாக சுற்றுலாத் தொழில் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து புலம்பெயர் வேலையாட்கள் நாடு திரும்பியமை அதேபோன்று வெளிநாட்டிலிருந்த சில வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 2020 மாச்சில் வேலையாட்களின் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தன. எனினும், கூட்டுக் கடன் வசதிகளிலிருந்தான பெறுகைகள் கிடைக்கப் பெற்றமையினால் நிதியியல் கணக்கு வலுவடைந்து காணப்பட்டது. 2020 மாச்சு இரண்டாம் வாரம் வரை ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்ட இலங்கை ரூபா 2020 ஏப்பிறல் நடுப்பகுதி வரை குறிப்பிடத்தக்களவிற்குத் தேய்வடைந்ததெனினும், 2020 மே மாத காலப்பகுதியில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க உயர்வுடன் அதன் பின்னர் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தது.*




இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனைப் புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிட முடியும். https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)**

| வகை | மாச்சு 2019 ஐ.அ.டொ மில் | மாச்சு 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-மாச் 2019 ஐ.அ.டொ மில் | சன-மாச் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,137 | 656 | -42.3 | 3,156 | 2,650 | -16.0 |
| இறக்குமதிகள் | 1,729 | 1,205 | -30.3 | 4,817 | 4,503 | -6.5 |
| வர்த்தகமீதி (தேறிய) | -592 | -549 | | -1,661 | -1,853 | |
| சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் | 461 (ஆ) | 135 (இ) | -70.8 | 1,396 (ஆ) | 956 (இ) | -31.5 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 571 | 492 | -13.9 | 1,617 | 1,600 | -1.0 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கானஉட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -5 | -6 | | -34 | -28 | |
| அரசாங்கத்திற்கானஉட்பாய்ச்சல் (மொத்தம்) | 2,583 | 592 | | 3,104 | 821 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 71 | 4 | | 238 | 83 | |
| நீண்ட காலக் கடன்கள் | 111 | 88 | | 465 | 238 | |
| கூட்டுக்கடன்கள் | - | 500 | | - | 500 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 2,400 | - | | 2,400 | - | |
| திரண்ட நிலுவை | | | | 912 | 143 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- பெறுமதி நியதிகளில், இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியை விஞ்சிக் காணப்பட்டமையினால், 2020 மாச்சில் **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை** 2019 மாச்சின் ஐ.அ.டொலர் 592 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 549 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை, 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,661 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,853 மில்லியனுக்கு விரிவடைந்தது. 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதிகளின் விலைகளுக்கு ஏற்றுமதிகளினது விலைகளின் விகிதம், ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக, 2020 மாச்சில் 25.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) மேம்பட்டது.

### வரைபடம்: 1 : 2020 சனவரி – மாச்சில் வர்த்தகப் பற்றாக்குறையின் அதிகரிப்பிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)

**ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி (ஆ.ஆ)** | **இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு (ஆ.ஆ)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019– 2020)




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2019 - 2020)




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2020 மாச்சில், **வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2020 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவு வளர்ச்சிக்கு மாறாக ஐ.அ.டொலர் 656 மில்லியனுக்கு 42.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சி கண்டது. ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டமையின் காரணமாக உள்நாட்டு உற்பத்திச் செய்முறைகளுக்கு ஏற்பட்ட தடங்கல்கள், ஏற்றுமதிகளுடன் தொடர்பான பணிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள், கொவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிரம்பல் மற்றும் கேள்விச் சங்கிலிகளுக்கு ஏற்பட்ட தடங்கல்கள் என்பன ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சிக்கு முக்கிய காரணிகளாக அமைந்தன.
- இதற்கமைய, அனைத்து முக்கிய ஏற்றுமதித் துறைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் 2020 மாச்சில் குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிவுசெய்தன. புடவைகள் மற்றும் ஆடைகள், தேயிலை, இறப்பர் உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள், கடலுணவு மற்றும் தெங்கு போன்ற முக்கியமான ஏற்றுமதி உற்பத்திகள் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. எனினும், இம்மாத காலப்பகுதியில் சிறுவேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வளர்ச்சியைப் பதிவுசெய்தன.
- 2020 மாச்சில், ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 45.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 7.3 சதவீதத்தினால் மேம்பாடடைந்து, 2019 மாச்சுடன் ஒப்பிடுகையில், ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு குறைந்த அளவுகளே முழுத் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | மாச்சு 2019 ஐ.அ.டொ மில் | மாச்சு 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-மாச் 2019 ஐ.அ.டொ மில் | சன-மாச் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **898.4** | **531.5** | **-40.8** | **2,494.3** | **2,134.1** | **-14.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 47.3 | 38.1 | -19.3 | 135.9 | 110.3 | -18.9 |
| விலங்குத்தீன் | 8.7 | 5.8 | -33.6 | 35.3 | 25.4 | -28.0 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 532.7 | 312.7 | -41.3 | 1,474.2 | 1,254.9 | -14.9 |
| இதில் ஆடைகள் | 494.8 | 294.1 | -40.6 | 1,373.3 | 1,163.9 | -15.2 |
| புடவைகள் | 28.1 | 12.6 | -55.3 | 74.4 | 64.9 | -12.7 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.8 | 6.0 | -38.9 | 26.5 | 26.1 | -1.8 |
| இறப்பர் உற்பத்திகள் | 82.6 | 54.5 | -34.1 | 233.0 | 196.2 | -15.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 32.1 | 8.6 | -73.3 | 83.3 | 54.6 | -34.5 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 39.0 | 21.1 | -45.8 | 108.0 | 86.4 | -20.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 10.0 | 3.6 | -63.8 | 26.0 | 17.7 | -31.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 48.0 | 37.0 | -22.9 | 124.0 | 177.7 | 43.2 |
| இரசாயன உற்பத்திகள் | 16.4 | 9.6 | -41.1 | 44.5 | 37.7 | -15.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.6 | 5.3 | -58.0 | 40.1 | 26.5 | -33.9 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 4.2 | 2.9 | -30.4 | 11.1 | 10.7 | -3.6 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 9.6 | 3.7 | -61.4 | 33.2 | 16.6 | -50.1 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.8 | 3.5 | -49.1 | 19.0 | 15.0 | -21.0 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 17.8 | 6.7 | -62.5 | 47.2 | 31.5 | -33.2 |
| மட்பாண்டஉற்பத்திகள் | 2.4 | 1.3 | -43.7 | 7.1 | 6.1 | -14.6 |
| ஏனையவை | 28.3 | 17.0 | -39.7 | 72.3 | 66.8 | -7.7 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **232.3** | **122.7** | **-47.2** | **647.7** | **506.5** | **-21.8** |
| தேயிலை | 125.9 | 62.5 | -50.3 | 347.2 | 270.1 | -22.2 |
| இறப்பர் | 3.2 | 1.4 | -58.2 | 8.4 | 7.2 | -14.0 |
| தெங்கு | 34.8 | 19.7 | -43.4 | 87.8 | 70.4 | -19.8 |
| வாசனைத்திரவியங்கள் | 24.2 | 12.9 | -46.6 | 80.6 | 51.0 | -36.7 |
| காய்கறிகள் | 3.0 | 1.8 | -38.7 | 8.1 | 6.8 | -15.6 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.5 | 1.0 | -70.0 | 7.5 | 4.4 | -40.9 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 9.5 | 10.5 | 10.5 | 27.2 | 39.6 | 45.5 |
| கடலுணவு | 28.2 | 12.8 | -54.8 | 80.9 | 57.0 | -29.6 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **4.5** | **1.0** | **-77.2** | **9.1** | **4.9** | **-46.0** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.7** | **1.1** | **-31.2** | **5.0** | **4.2** | **-17.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,136.9** | **656.4** | **-42.3** | **3,156.1** | **2,649.7** | **-16.0** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்,இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- **வணிகப்பொருள் இறக்குமதிகள்** மீதானம் செலவினம், 2019 திசெம்பரிலிருந்து அவதானிக்கப்பட்டு வந்த அதிகரித்துச்செல்லும் போக்கிற்கு மாறாக, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2020 மாச்சில், 30.3 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,205 மில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இலங்கைச் சுங்கத்தினால் பின்பற்றப்பட்ட குறிப்பிட்ட இறக்குமதி அகற்றல் செய்முறைகள் அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டமை, ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையின் காரணமாக ஏனைய இறக்குமதியுடன் தொடர்பான பணிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள், உலகளாவிய நிரம்பல் மற்றும் வசதி ஏற்பாட்டுச் சங்கிலிகளுக்கு ஏற்பட்ட தடங்கல்கள், கொவிட்-19 பரவலினைத் தொடர்ந்து பண்டங்களின் விலை குறைவடைந்தமை என்பன இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட முன்னொரு போதுமில்லாத வீழ்ச்சிக்கான காரணங்களாக அமைந்தன. அத்துடன், செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைத் தளர்த்துவதற்கும், உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிக்கான வசதிகளை இடைநிறுத்துதல் உட்பட, கொவிட்-19 தொற்றின் காரணமாக நிதியியல் சந்தைப் பதற்றங்களைத் தடுப்பதற்காகவும் 2020 மாச்சில் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட அவசரமான வழிமுறைகளும் கூட இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தன.

- இதன்படி, அனைத்து முக்கிய இறக்குமதித் துறைகளான நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களும் 2020 மாச்சில் வீழ்ச்சி கண்டன. எரிபொருள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு மசகெண்ணெய் (2020 மாச்சில் சராசரியாக பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 37.7 சதவீதம்), சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பனவற்றின் தாழ்ந்த சராசரி இறக்குமதி விலைகளே வழிவகுத்தன. மசகெண்ணெய் தவிர்ந்த இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளின் அளவும் வீழ்ச்சியடைந்தது. பொறி மற்றும் சாதனங்கள், புடவை மற்றும் புடவைப்பொருட்கள், கட்டட மூலப்பொருட்கள், வளமாக்கி, இரசாயன உற்பத்திகள் என்பன குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. மேலும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருந்த தனியாள் ஊர்திகள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள், வீட்டு உபயோகப்பொருட்களின் இறக்குமதி போன்ற உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினமும் 2020 மாச்சில் குறைப்புக்களைப் பதிவுசெய்தது. எனினும், கோதுமை, காய்கறிகள் (முக்கியமாகப் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு), சீனி, வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்) கடலுணவு (முக்கியமாக தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் கருவாடு) போன்ற அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 மாச்சில் அதிகரித்தது. மேலும், இடைநிலைப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு), இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினமும் 2019 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2020 மாச்சில் அதிகரித்தன.

- 2020 மாச்சில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் முறையே 18.4 சதவீதத்தினாலும் 14.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2019 மாச்சுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவுகள் மற்றும் குறைந்த விலைகள் இரண்டும் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | மாச்சு 2019 ஐ.அ.டொ மில் | மாச்சு 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-மாச் 2019 ஐ.அ.டொ மில் | சன-மாச் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **351.9** | **267.1** | **-24.1** | **912.3** | **966.1** | **5.9** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 138.0 | 143.0 | 3.6 | 334.9 | 426.4 | 27.3 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.5 | 2.0 | -20.3 | 9.7 | 11.9 | 23.7 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 40.6 | 32.5 | -20.0 | 64.6 | 96.8 | 49.9 |
| காய்கறிகள் | 27.2 | 38.8 | 42.4 | 71.7 | 104.7 | 46.0 |
| கடலுணவு | 17.0 | 17.8 | 4.3 | 50.3 | 46.7 | -7.3 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 20.0 | 27.2 | 36.0 | 48.9 | 73.1 | 49.5 |
| வாசனைத்திரவியங்கள் | 10.4 | 11.2 | 8.0 | 29.1 | 34.9 | 19.7 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 20.3 | 13.6 | -32.9 | 60.7 | 58.4 | -3.8 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | 213.8 | 124.0 | -42.0 | 577.4 | 539.7 | -6.5 |
| தனியாள் ஊர்திகள் | 72.2 | 39.5 | -45.3 | 169.8 | 156.4 | -7.9 |
| மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் | 44.1 | 34.4 | -22.1 | 121.8 | 125.4 | 3.0 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் | 20.5 | 10.9 | -46.7 | 50.2 | 50.6 | 0.8 |
| ஆடைகள் மற்றும் அதன் துணை உற்பத்திகள் | 22.5 | 15.2 | -32.4 | 75.1 | 73.2 | -2.5 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 22.8 | 7.4 | -67.5 | 61.6 | 48.7 | -21.0 |
| வீட்டுச்சாதனம் மற்றும் தளபாடங்கள் | 11.2 | 6.9 | -38.5 | 35.9 | 37.8 | 5.3 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 20.6 | 9.8 | -52.4 | 63.0 | 47.6 | -24.3 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **987.1** | **699.7** | **-29.1** | **2,774.2** | **2,545.7** | **-8.2** |
| எரிபொருள் | 407.9 | 237.7 | -41.7 | 1,018.6 | 948.2 | -6.9 |
| இதில் மசகெண்ணெய் | 101.9 | 54.6 | -46.4 | 237.7 | 194.9 | -18.0 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 271.5 | 153.1 | -43.6 | 659.0 | 649.7 | -1.4 |
| நிலக்கரி | 34.5 | 29.9 | -13.1 | 122.0 | 103.6 | -15.1 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 14.7 | 5.4 | -63.1 | 47.7 | 25.7 | -46.1 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 213.9 | 139.3 | -34.9 | 688.6 | 622.0 | -9.7 |
| தாள், தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் | 34.1 | 20.4 | -40.2 | 103.7 | 90.9 | -12.4 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 17.6 | 14.5 | -17.4 | 45.4 | 50.8 | 12.1 |
| கோதுமை மற்றும் சோளம் | 12.0 | 62.5 | 419.3 | 53.2 | 79.8 | 49.9 |
| அடிப்படை உலோகங்கள் | 34.6 | 52.6 | 52.0 | 140.8 | 98.2 | -30.2 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 47.4 | 32.0 | -32.5 | 143.7 | 126.9 | -11.7 |
| இரசாயன உற்பத்திகள் | 70.9 | 52.0 | -26.7 | 207.4 | 190.5 | -8.1 |
| வளமாக்கி | 39.3 | 6.7 | -83.1 | 48.4 | 25.9 | -46.5 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 16.8 | 20.5 | 22.3 | 52.4 | 67.5 | 28.7 |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 77.8 | 56.1 | -27.9 | 224.4 | 219.2 | -2.3 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **389.3** | **236.8** | **-39.2** | **1,128.8** | **983.8** | **-12.8** |
| பொறிகள் மற்றும் சாதனங்கள் | 213.9 | 130.2 | -39.1 | 639.0 | 572.4 | -10.4 |
| கட்டடப் பொருட்கள் | 135.0 | 72.7 | -46.2 | 375.7 | 294.4 | -21.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 39.5 | 33.7 | -14.8 | 112.3 | 116.1 | 3.4 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 1.0 | 0.2 | -77.1 | 1.8 | 0.9 | -51.0 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.7** | **1.5** | **99.8** | **1.6** | **7.1** | **355.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,729.0** | **1,205.0** | **-30.3** | **4,816.9** | **4,502.7** | **-6.5** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,321.2** | **967.4** | **-26.8** | **3,798.3** | **3,554.5** | **-6.4** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- கொவிட்-19 தொற்றின் காரணமாக 2020 மாச்சிலிருந்து இலங்கையின் சுற்றுலா தொழில் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இலங்கைக்கான அனைத்துப் பயணிகள் பறப்புக்களும் கப்பல்களும் நிறுத்தப்பட்டமை, 2020 மாச்சு மூன்றாம் வாரத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை நிறுத்தப்பட்டமை என்பன சுற்றுலாப் பயணிகளின் வருகை 2019 மாச்சின் 244,328 இலிருந்து 71,370 இற்கு 70.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது.

- இவ்வபிவிருத்திகளுடன், 2020 மாச்சில் தற்காலிகமாக மதிப்பிடப்பட்ட **சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்** 2019 மாச்சின் ஐ.அ.டொலர் 461 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 135 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 956 மில்லியனாக விளங்கியதுடன் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 31.5 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும்.

- அதேவேளை, 2020 மாச்சில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்** ஐஅடொலர் 492 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 13.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2020 மாச்சில் வானூர்திநிலையம் மூடப்படுவதற்கு முன்னதாக தென்கொரியா மற்றும் இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையினர் நாடு திரும்பியிருந்தனர். இது, இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள் தொழில்புரியும் மத்திய கிழக்கின் பொருளாதாரங்களைப் பாதித்து வருகின்ற தாழ்ந்த மசகெண்ணெய் விலைகளினால் மேலும் பெரிதாயிற்று. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,600 மில்லியனாக விளங்கி 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

**வரைபடம் 8: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 மாச்சில், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 261 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலானது 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 361 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலைத்

தோற்றுவித்தது. கொவிட்-19 தொற்றினை உடனடுத்து பெரும்பாலான தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் முன்னணி பொருளாதாரங்களின் முறிச் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்டன. எனினும், வெளிநின்ற அரச பிணையங்களில் மிகக் குறைந்தளவு பங்கே வதிவற்றோரின் வசமிருக்கின்றமையினால் அத்தகைய வெளிப்பாய்ச்சல்களுக்கு இலங்கை உள்ளாகும் தன்மை மிகச் சொற்பமாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

- 2020 மாச்சில் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருந்த கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடு, ஐ.அ.டொலர் 6 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து 2020 மே நடுப்பகுதி வரை வர்த்தகத்திற்காக மூடப்பட்டிருந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 28 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.

- 2020 மாச்சில் அரசிற்கான நீண்ட காலக் கடன்களின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 588 மில்லியனாக விளங்கின. இது சீன அபிவிருத்தி வங்கியிலிருந்தான ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட கூட்டுக்கடன் வசதிகளின் பெறுகையினை உள்ளடக்கியிருந்தது.

.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2020 மாச்சு இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனாக விளங்கி 4.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 10.7 பில்லியனாக விளங்கி 6.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

- 2020 மாச்சு இரண்டாம் வாரம் வரை பெருமளவிற்கு உறுதியாகக் காணப்பட்ட இலங்கை ரூபா, மாச்சு பிற்பகுதியிலிருந்து 2020 ஏப்பிறல் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் கொவிட்-19 தொற்றின் பரவலுடன் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்து, 2020 ஏப்பிறல் 9ஆம் திகதியன்று ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூ.199.75 கொண்ட உச்சமட்டத்தினை அடைந்தது. எனினும், அதன் பின்னர் இலங்கை ரூபா உறுதியடைந்து 2020 மே மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு உயர்வினைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, 2020 ஏப்பிறல் 9ஆம் நாள் வரை ஐ.அ.டொலருக்கெதிராக 9.1 சதவீதத்தினால் தேய்வடைந்த ரூபா, இப்போக்கிற்கு மாறாக குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்து 2020 யூன் 01ஆம் திகதி 2.4 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 யூன் 01ஆம் நாள் வரையான இவ்வாண்டுப்பகுதியில் ரூபா யூரோ மற்றும் யப்பானிய யென்னுக்கெதிராக தேய்வடைந்த வேளையில், பவுண் ஸ்ரேலிங், கனேடியன் டொலர், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபாவிற்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்கடொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 யூன் 01 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -2.4% |
| யூரோ | -12.7% | +2.6% | -1.7% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -2.8% | +3.2% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -3.3% |
| கனேடியன் டொலர் | -9.3% | -3.7% | +2.5% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | +1.6% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +3.1% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி